**இலங்கை கல்வி நிர்வாக சேவை I ஆம் தர உத்தியோகத்தர்களை மாகாணக் கல்வித் திணைக்களங்களில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிகளில் நியமித்தல் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக்காக ஈடுபடுத்துவதற்குரிய அங்கீகரிக்கப்பட்ட புள்ளித திட்டம்**

**1. சேவை மூப்பு** **அதிகபட்சம் மதிப்பெண்கள் 30**

இ.க.நி. சேவை பிரமாணக்குறிப்பின்படி அடிப்படைத் தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தரம் I இல் திருப்திகரமான 5 வருட சேவைக்கு மேலதிகமாக, இ.க.நி. சேவை தரம் 1 யில் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காக மட்டுமே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை எண். 01/2019 இன் படி இந்த புள்ளி வழங்கப்படும்.

இதன்படி, சம்பந்தப்பட்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் அதிகாரிகளுக்கிடையில் மேற்கூறியவாறு அதிக கூடுதல் சேவைக் காலத்தைக் (இ.க.நி. சேவை தரம் 1 யில் திருப்திகரமான 5 வருட சேவைக்கு மேலதிகமாக) கொண்ட அதிகாரி , சேவை மூப்புக்காக ஒதுக்கப்பட்ட மொத்த புள்ளிகள் அளவில், ஏனைய அலவலர்களுக்கு சமவிகிதாசரத்தில் என்பதாக புள்ளி உரித்தாகுமாறு புள்ளி வழங்கப்படும்.

குறிப்பு : இ.க.நி.சே தரம் 11 இரண்டில் இரண்டு (02) வருட சேவையுடன் 11 மற்றும் 111 தரங்களில் 12 வருடங்களுக்கும் மேலாக முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவையை முடித்த பின்னர் தரம் I க்கு பதவி உயர்வு பெற்ற அதிகாரிகளின், அந்த முழு சேவைக்காலம் 12 வருடத்துக்கு மற்றும் தரம் 11யில் 02 வருடத்துக்கு மேலதிகமாக முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலம் தரம் 1 இன் சேவைக்காலமாக கருதப்பட்டு புள்ளி வழங்கப்படும்.

**2. துறையில் சேவை அனுபவம்** **அதிகபட்ச மதிப்பெண் 15**

(சம்பந்தப்பட்ட நியமன அதிகாரிகளால் வழங்கப்படும் முறையான நியமனக் கடிதங்களுக்கு மட்டுமே அதிகபட்ச புள்ளி எல்லைக்கு உட்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்)

2.1 பாடசாலை முகாமைத்துவத்தில் அனுபவம் 10 மதிப்பெண்கள்
(இ.க.நி.சே தரம் 1 அனுமதிக்கப்பட்ட அதிபர் பதவியில் வருடத்திற்கு 1 மதிப்பெண்)

2.2 அலுவலக நிர்வாகத்தில் அனுபவம் 10 மதிப்பெண்கள்
(அதிபர் பதவியைத் தவிர இலங்கை கல்வி நிர்வாக சேவை 1 ஆம் தரத்தில் வேறு பதவியொன்றில் ஒருவருட சேவைக் காலத்திற்காக வழங்கப்படும் புள்ளிகள் 1)

**3. கல்வித் தகைமைகள்** **அதிகபட்ச மதிப்பெண் 10**

| | | |
|---|---|---|
| 3.1 | கலாநிதி (PhD) | - புள்ளிகள் 10 |
| 3.2 | தத்துவமாணி (M Phil) | - புள்ளிகள் 07 |
| 3.3 | பட்டப்பின் பட்டம் | - புள்ளிகள் 05 |
| 3.4 | பட்டப்பின் பட்ட டிப்ளோமா | - புள்ளிகள் 03 |

(வினைத்திறன் தடைதாண்டலில் இருந்து விடுவிப்பதற்கு கவனத்திற்கொள்ளப்பட்ட தகைமைகளைத் தவிர வேறு கல்வித்தகைமைகள் மாத்திரம் மேற்படி புள்ளிகள் வழங்கப்படுவது தொடர்பாக கவனிக்கப்படுவதுடன், ஒரு சான்றிதழுக்கு/மிக உயர்வான தகுதிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும். மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம்/நிறுவகங்களில் பயின்ற, சேவை பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது கல்விச் செயலாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற கல்வித்துறைக்குரிய கல்வித் தகுதிகள் தொடர்பாக மாத்திரம் உரிய புள்ளிகள் வழங்கப்படும்)



Scanned with MOBILE SCANNER

**4. படைப்பாற்றல் மற்றும் தொழில் விருத்தி** **அதிகபட்ச மதிப்பெண் 15**

4.1 தொழில்த்துறைக்குரிய ஆராய்ச்சிகள் **புள்ளிகள் 10**

(பட்டப்பின் பட்டத்திற்கு / பட்டப்பின் பட்ட டிப்ளோமா தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைகளுக்கான ஆராய்ச்சிகள் / ஆய்வுக்கட்டுரைகள் தொடர்பில் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் தொழிற்துறைக்குரிய பிரபல கலந்துரையாடல் மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட முறையாக பூர்த்திசெய்யப்பட்ட ஒரு ஆராய்ச்சி அறிக்கைக்கு 05 புள்ளிகள் என்ற ரீதியில் ஆகக்கூடிய ஆராய்ச்சிகளுக்காக 02 புள்ளிகள் வழங்கப்படும்)

4.2 வெளியிடப்பட்ட சஞ்சிகைகள், கடிதங்கள், வெளியீடுகள் போன்றவை **புள்ளிகள் 05**

(பாடப்புத்தகங்கள் மற்றும் அவற்றை சார்ந்த குறிப்பு புத்தகங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன், கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை மூலமாக அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களுக்கு மாத்திரம், பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட கட்டுரைககள், அறிக்கைகள் அல்லது வெளியீடுகள் தொடர்பாக புள்ளிகள் வழங்கப்படும்போது கல்விச் செயலாளரினால் நேர்முகத் தேர்வின் போது புள்ளிகள் வழங்கப்படுவது பொருத்தமானதென தீர்மானிக்கப்படும் வெளியீடுகள் தொடர்பாக மாத்திரம் ஒரு வெளியீட்டிற்கு 02 புள்ளிகள் வீதம் ஆக்ககூடிய 03 வெளியீட்டுகளுக்காக புள்ளிகள் வழங்கப்படும்.)

**5. கணினி கல்வியறிவு தொடர்பான அறிவு** **அதிகபட்ச புள்ளிகள் 05**

(செயற்பாட்டு மென்பொருள், பயன்பாட்டு மென்பொருள் கையாளுதல் தொடர்பான செயன்முறை அறிவு மற்றும் கணினி வன்பொருள் தொடர்பான அடிப்படை அறிவை பரீட்சித்துப்பார்க்கப்படும்.)

**6. ஆங்கில மொழியின் புலமை** **அதிகபட்ச புள்ளிகள் 05**

(ஆங்கில மொழியை கையாள்வது தொடர்பான செயன்முறை பயன்பாடு மற்றும் திறனை பரீட்சித்துப் பார்க்கப்படும்.)

**7. சேவை மதிப்பீடு / பாராட்டுச் சான்றிதழ் / விருது சான்றிதழ் / வெற்றிகள்**

**அதிகபட்ச புள்ளிகள் 05**

(பொது மாதிரி படிவ இலக்கம் 230 பீ மூலமாக தாபனத் தலைவரினால் வழங்கப்பட்டுள்ள பாராட்டுகள் மற்றும் கண்டனங்கள மாதிரிக்கு அமைய முறைப்படி வழங்கப்பட்ட சேவை மதிப்பீடு ஒன்றுக்கு 01 புள்ளி வீதம் மாத்திரம் ஒன்றுக்கு அதிகபட்ச புள்ளிகள் 05 தொடர்பாக)

**குறிப்பு : (திணைக்களத்தின் தலைவர் மாகாண பிரதம செயலாளர், மாகாண கல்வி செயலாளர், மாகாண கல்வி பணிப்பாளர், வலய கல்வி பணிப்பாளர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அல்லது கல்வி வெளியீடுகள் ஆணையாளர் நாயகம்)**

**8. முன்வைப்பு** **அதிகபட்ச புள்ளிகள் 10**

கல்வித் துறையின் புதிய போக்குகள், தற்போதைய கல்விக் கொள்கைகள் மற்றும் 21 ஆம் நூற்றாண்டின் சவால்கள் குறித்து கவனம் செலுத்தி, மாகாணக் கல்விப் பணிப்பாளராக, கல்வி முறையின் தரம் மற்றும் வினைத்திறனை அதிகரிக்க எதிர்காலத்தில் எவ்வாறு பணியாற்ற நம்புகின்றீர்கள் என்பது பற்றிய உங்களது பிரயோக அனுபவம் தொடர்பான 05 நிமிட வாய்மொழி முன்வைப்பு மேற்கொள்ள வேண்டும் என்பதொடு முன்வைப்பின் கடின பிரதியை நேர்காணல் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| **I** | **பிரவேசம் மற்றும் அறிமுகம்** | **- புள்ளிகள் 2** |
| **Ii** | **உள்ளடக்கம்** | **- புள்ளிகள் 2** |
| **Iii** | **நேர முகாமைத்துவம்** | **- புள்ளிகள் 2** |
| **1v** | **சமர்ப்பிக்கப்படும் விதம்** | **- புள்ளிகள் 2** |
| **V** | **முடிவு மற்றும் தீர்வு** | **- புள்ளிகள் 2** |

அதற்காக கணினி மூலமாக (Power Point) அல்லது வேறு பொருத்தமான ஊடகங்கள் மூலமாக 05 வினாடிகள் வாய்மூல விளக்கக்காட்சியினை முன்வைப்பதுடன் உங்களால் கல்விக்குரிய கடின நகலாக முன்வைக்கப்படும் விடயங்கள் நேர்முகத்தேர்வுக் குழுவிற்கு வழங்கப்படல் வேண்டும்

**9. நேர்முக பரீட்சையின் போது காட்டப்படும் ஒட்டுமொத்த திறன்** **அதிகபட்ச புள்ளிகள 05**



**100**

Scanned with MOBILE SCANNER